பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 23 வியாழக்கிழமை 06.05.2021 கதிர் 50

## கொழும்புத் துறைமுக நகர

## சட்டமூலத் தீர்ப்பை 18இல் அறிவிப்பார் சபாநாயகர்!



கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகர் மஹிந்த யாப்பா

☞2

## ரஞ்சனுக்கு விரைவில் மன்னிப்பு?



நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

☞2

## சஜித்தை அவசரமாகச் சந்தித்த ஐ.நா. பிரதிநிதி

இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையில் விசேட சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இவர்கள் இருவருக்கும் இடையிலான சந்திப்பு எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் கொரோனா பரவல் தீவிரமடைந்து வருவதும் அதனூடாக நாடு எதிர்கொண்டுள்ள சவால்களும் இதன்போது கலந்துரையாடப்பட்டன என்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் இன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை எதிர்கொண்டுள்ள சவால்கள் தொடர்பில் ஐ.நா. ஒத்துழைக்க

☞2



# இந்தியாவை விட இலங்கையில் கொரோனாத் தொற்றாளர் உச்சம்

## வரப்போகின்ற பேராபத்தை எச்சரித்தது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம்

**இந்தியாவை விட இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகின்றவர்களின் விகிதம் அதிகமாகும். எனவே, எதிர்காலத்தில் பெரும் ஆபத்தை இலங்கை எதிர்கொள்ளவுள்ளது.**

**- இவ்வாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய எச்சரித்துள்ளார்.**

**சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.**

☞2



## ஒரே நாளில் 14 சாவுகள்!

### கொரோனா காவு 734

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 14 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்படி 14 மரணங்களும் கொரோனாச் சாவுப் பட்டியலில் நேற்று பதிவாகியுள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி

☞2

## மேலும் 2 இடங்கள் முற்றாக முடக்கம்!

நுவரெலியா மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் இரண்டு பிரதேசங்கள் இன்று காலை முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை பொலிஸ்

☞2

### இறந்தவருக்குக் கொரோனா உறுதி

## யாழில் மரண வீட்டுக்குச் சென்ற 30 குடும்பங்கள் தனிமைப்படுத்தல்

### வைத்தியசாலை நிர்வாகம் மீது குற்றச்சாட்டு

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நிர்வாகத் தவறினால் யாழில் 30 குடும்பங்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படும் அவலம் ஏற்பட்டுள்ளது எனச் சிறாம்பியடி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். சிறாம்பியடியைச் சேர்ந்த ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வேளை நேற்று உயிரிழந்தார். இவ்வாறு உயிரிழந்தவரின் சடலம் வீட்டாரிடம்

☞2

## இலங்கையின் மருத்துவமனைகளில் இடப்பற்றாக்குறை அபாய நிலைமை

### கொரோனாத் தடுப்பு இராஜாங்க அமைச்சர் முன்னெச்சரிக்கை

இலங்கையின் மருத்துவமனைகளில் இடப்பற்றாக்குறை ஏற்படும் அபாயம் நிலவுகின்றது என ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்று நோய்கள் மற்றும் கொவிட் தடுப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே எச்சரித்துள்ளார்.

நாட்டின் கொரோனா நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை வழங்க முடியுமான நோயாளர்

☞2



## கொரோனா நிலைமையால் 20 ரயில் சேவைகள் ரத்து!



இன்றிரவு பயணிக்கவிருந்த தபால் ரயில் உள்ளிட்ட 20 ரயில் சேவைகள் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனாவைரஸ் தொற்று நிலைமையின் மத்தியில் ரயில்களில் பயணிப்போரின்

☞2



## ஹக்கீம், ரிஷாத் கட்சிகளின் எம்.பிக்கள் பிரதமரின் இப்தார் நிகழ்வில் பங்கேற்பு

முஸ்லிம் மக்கள் சார்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் ஆண்டுதோறும் நடத்தப்படும் 'இப்தார்' நோன்பு திறக்கும் நிகழ்வு இம்முறை கொரோனாக் கட்டுப்பாட்டு விதிகளுக்கு அமைய நேற்று இடம்பெற்றது.

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

☞2

## இலங்கையின் மருத்துவமனைகளில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொகை உச்சத்தை எட்டியுள்ளது என வும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள் ளார்.

ஒரே தடவையில் அதிகமான நோயா ளர்களை மருத்துவமனைகளில் வைத்து, சிகிச்சையளிக்கும் வசதிகள் குறைந்து கொண்டு செல்கின்றன எனவும், அவசர சிகிச்சைப்பிரிவுகள் குறைவாக இருக்கின் றன எனவும் சுகாதாரத்துறை தெரிவித் துள்ளது.

பொதுமக்கள் தேவையற்ற பயணங் களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும், பி.சி.ஆர். பரிசோதனை முடிவு கள் தெரியவரும் வரை சுய தனிமைப் படுத்தலில் இருக்க வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி கேட் டுக்கொண்டுள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளான 16 ஆயிரத்து 720 பேர் தற்போது மருத்து வமனைகளில் சிகிச்சை பெற்று வருகின் றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில் மரண .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வழங்கப்பட்டது. யாழ். போதனா வைத் தியசாலையில் இருந்து வழங்கப்பட்ட சடலம் என்பதால் நம்பிக்கையின் அடிப்ப டையில் மரண நிகழ்வுக்குச் சென்றோம்.

இந்தநிலையில் இறந்தவருக்குக் கொரோனா என்பதால் மரண வீட்டுக்குச் சென்ற அனைவரையும் தனிமைப்படுத் தலுக்கு உட்படுத்துமாறு சுகாதாரப் பிரிவி னர் தற்போது கட்டாயப்படுத்துகின்ற னர்.

யாழ். போதனாவைத்தியசாலையின் தவறின் காரணமாக சடலத்தை ஏற்றி இறக்கியவர், கையாண்டவர்கள், மரண வீட்டுக்குப் போனவர்கள் என 30 குடும் பம் தனிமைப்படுத்தலுக்குச் செல்லும் அவலம் ஏற்பட்டுள்ளது. - என்றனர்.

இது தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத் துவர் பவானந்தராஜாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

உயிரிழந்த நபர், கடந்த 4ஆம் திகதி காலை 8.45 மணிக்கு வைத்தியசாலை யில் அன்டியன் பரிசோதனைக்கு உட்ப டுத்தப்பட்டு சேர்க்கப்பட்டார். அந்தப் பரி சோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று இல்லை என எழுதப்பட்டுள்ளது. இந்தநிலையில் மறுநாள் 5ஆம் திகதி பகல் அவர் உயிரிழந்துவிட்டார்.

மரணத்தின் பின்பும் மாதிரி பெறப் பட்டபோதும் முதல் நாள் சோதனை செய்த அடிப்படையில் உடலம் வழங்கப் பட்டுள்ளது. - என்றார்.

இவ்வாறு சர்ச்சைக்குள்ளான சடலம் இன்று காலை மீண்டும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட் டது.

## கொரோனா .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எண்ணிக்கைகுறைவடைந்துள்ளதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, இன்றிரவு சேவை யில் ஈடுபடவிருந்த கொழும்பு - பதுளை, கொழும்பு - திருகோணமலை, கொழும்பு - காங்கேசன்துறை இரவு நேர தபால் ரயில்கள் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

மேலும், கொழும்பு - வேயங்கொட, கொழும்பு - மீரிகம, கொழும்பு - அம் பேபுஸ்ஸ, கொழும்பு - பாணந்துறை, காலி - அளுத்கம மற்றும் அளுத்கம - காலி ரயில் சேவைகளும் ரத்துச் செய் யப்பட்டுள்ளன எனவும் ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## ஹக்கீம், ரிஷாத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இஸ்லாமிய மதத் தலைவர்கள் மற் றும் மக்களின் பங்கேற்புடன் நடை பெறும் இப்தார் நிகழ்வு இம்முறை கொரோனாத் தொற்று காரணமாக, இவ் வாறு சுருக்கமாக நடைபெற்றது எனப் பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித் துள்ளது.

முஸ்லிம் கட்சிகள் சிலவற்றைப் பிரதி நிதித்துவப்படுத்தி வருகை தந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், இதன் போது முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன் வைத்த பிரச்சினைகள் தொடர்பில் தாம் விசேட கவனம் செலுத்துவதாக பிரதமர் இதன்போது தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான நஸீர் அஹமட், எச். எம்.எம். ஹரீஸ், எஸ்.எம்.எம். முஷாரப், அலி சப்ரி ரஹீம், எம்.எஸ். தௌபீக், இஷாக் ரஹ்மான், பைசல் காசிம் மற்றும் பிரத மரின் இஸ்லாமிய விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு செயலாளர் பர்சான் மன்சூர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இந்தியாவை விட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தற்போது நாளாந்தம் 1,500 இற்கும் அதிகமான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படு கின்றார்கள்.

இந்தியாவில் நாளாந்தம் 3 லட்சம் அளவிலானோர் கொரோனாத் தொற் றுக்கு உள்ளாகின்ற போதும், இந்தியா வின் மக்கள் தொகை மற்றும் இலங்கை யின் மக்கள் தொகை என்பவற்றை ஒப் பிடும்போது, இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகின்றவர்களின் விகி தம் அதிகமாக இருக்கின்றது.

அதேநேரம், கொரோனா நோயாளர் களுக்கு சிகிச்சையளிப்பதற்கான கட்டில் களுக்கு எதிர்காலத்தில் பற்றாக்குறை ஏற் படக்கூடும்.

தற்போது வைத்தியசாலைகளின் கொள்ளளவைக் காட்டிலும், அதிகள வான எண்ணிக்கையில் கொரோனா நோயாளர்கள் இருக்கின்றனர். இது எதிர்காலத்தில் பெரும் நெருக்கடி நிலையை ஏற்படுத்தும் - என்றார்.

## மேலும் 2 இடங் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரிவுக்குட்பட்ட பனன்கம கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் திருகோணமலை மாவட் டத்தின் திருகோணமலை பொலிஸ் பிரி வுக்குட்பட்ட சுபத்ராலங்கா மாவத்தை கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தப் பட்டுள்ளது.

குறித்த பிரதேசங்களில் நிலவும் கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில்கொண்டு அந்தப் பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புச் செயலணியின் பிரதானி இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

## ஒரே நாளில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்தோரின் எண்ணிக்கை 734 ஆக அதிகரித்துள்ளது.

ஹிங்குராகொட பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடைய பெண், பொலன் னறுவை அரலகங்வில பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண், கோன பல பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயது டைய பெண், புலத்கொஹூபிட்டிய பிரதே சத்தைச் சேர்ந்த 76 வயதுடைய ஆண், தெவனகல பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுடைய ஆண், கல்லொல்ல பிரதே சத்தைச் சேர்ந்த 70 வயதுடைய பெண், திரப்பன பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய ஆண், வத்தளை பிரதேசத் தைச் சேர்ந்த 66 வயதுடைய ஆண், களுத் துறை தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண், பயாகல பிரதேசத் தைச் சேர்ந்த 82 வயதுடைய பெண், பேராதனை பிரதேசத்தைச் சேர்ந்த 87 வயதுடைய ஆண், குருன பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதுடைய பெண், தும்மல சூரிய பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயது டைய பெண், கிரிபத்கும்புர பிரதேசத்தைச் சேர்ந்த 84 வயதுடைய பெண் ஆகி யோரே கொரோனாச் சாவுப் பட்டியலில் நேற்று பதிவாகியுள்ளனர்.

## ரஞ்சனுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரஞ்சன் ராமநாயக்க கையெழுத்திட் டுள்ள பொதுமன்னிப்புக் கோரும் கடிதம் அவரின் சட்டத்தரணி ஊடாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாஸ ஆவணங்களைப் பெற்றுள்ளார் என்று எதிர்க்கட்சித் தலை வரின் செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத் தியுள்ளார்.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் குறித்த ஆவணங்களை ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகளிடம் ஒப்படைத் துள்ளார் எனவும், அந்த ஆவணங்கள் விரைவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவுக்கு அனுப்பப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சஜித்தை அவசர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டும் என்றும் சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண் டுள்ளார்.

தாம் இலங்கைக்கு அனைத்து வித மான ஒத்துழைப்புகளையும் வழங்கத் தயாராக இருப்பதாக ஐ.நா. வதிவிட பிரதி நிதி ஹனா சிங்கர் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பு நடவடிக்கை களில் கட்சி பேதம் இன்றி அரசுக்குத் தாம் ஒத்துழைப்பதாகவும், ஐக்கிய மக் கள் சக்தி கொரோனா விடயத்தில் அரசி யல் செய்யாது என்றும் சஜித் பிரேமதாஸ இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

## சட்டமூலத் தீர்ப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அபேவர்தனவுக்குக் கிடைக்கப்பெற்றுள் ளது.

நேற்று மாலை குறித்த தீர்ப்பு சபா நாயகருக்குக் கிடைத்துள்ளது என நாடா ளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி குறித்த தீர்ப்பு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனக் குறித்த திணைக்களம் அறிவித்துள் ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com தொலைபேசி இலக்கம்- 076 443 8622

**மஞ்சள் கன்று விற்பனைக்கு**
1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 021 492 7778

**A/L கணக்கீடு**
அன்றும்.. இன்றும்.. என்றென்றும்...
உங்கள் கணக்கீட்டு ஆசிரியர்
Mr.K. BALAKAJEN
B.Com (Jaf), H.N.Dip-in-Acc (ATI), Dip-in-Edu (OUSL), M.Com (Hons) Acc.Spl

| கந்தர்மடச் சந்தி யாழ்ப்பாணம் | சுவாமியார் வீதி கொழும்புத்துறை |
|---|---|
| சனி, ஞாயிறு 6.00 - 8.00 a.m | சனி, ஞாயிறு 2.00 - 7.00 p.m |
| வியாழன் 5.00 - 8.00 p.m | புதன் 6.00 - 9.00 p.m |
| ZOOM Classes (வெளி மாணவர்களுக்காக) | திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி 7.30 - 10.15 p.m |

Theory + Paper + Mcq + Model exam
கணக்கீட்டினை தெளிவாகவும் கற்க விரும்பும் மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெறுகின்றன.
0772168884

கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 28.08.1954
இறப்பு 04.05.2021
அமரர்.
திருமதி. மகாலக்ஷ்மி மதியாபரணம்
(யாழ் பல்கலைக்கழக நிதிக்கிளையில் பணியாற்றும் திருமதி. துஷியா பத்மநாதன் அவர்களின் அன்புத்தாயார்)

காலனவன் தன் கணக்கை சாலவே செய்யவே
மண் வீட்டு வானம் சென்றீரோ?
வானம் சென்ற உமை நினைத்து
கண்ணீர் விட்டு கரைகின்றோம் ஆற்றுவாரில்லை
ஆறுதல் சொல்ல சொற்கள் இல்லை.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிதிக்கிளை ஊழியர்கள்
யாழ் பல்கலைக்கழகம்

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## குற்றப் பொறுப்பு சபாநாயகர் மீது

நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் கோட்டா அரசு உய்ய விடாது என்பது போலவே தோன்றுகின்றது.

தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சபைக்கு வருவதற்குரிய சிறப்புரிமை தடுக்கப்படுகின்றது. அந்தச் சிறப்புரிமை நிலைநாட்டப்படுவதை உறுதிப்படுத்த வேண்டிய சபாநாயகரோ, கையாலாகாதவராகப் பார்த்திருக்கின்றார்.

சபைக்கு ஓர் உறுப்பினர் வருவதற்குரிய உரிமையை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைக் காட்டி, முறையற்ற விதத்தில் தடுக்கும் எத்தனம் ஆளுந்தரப்பால் முன்னெடுக்கப்படுகின்றது. நாட்டின் பொதுசனப் பாதுகாப்பு அமைச்சர் அந்த சிறப்புரிமை மீறலை நியாயப்படுத்துகின்றார். அதுவும் சபையில் நாட்டின் ஜனாதிபதியையும் பிரதமரையும் வைத்துக் கொண்டு.

அது குறித்து, தீர்க்கமான ஓர் உத்தரவு கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டிய சபாநாயகரோ பேச்சு மூச்சற்று வாயடைத்துப் போயிருக்கின்றார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரிஷாத் பதியுதீன் நாடாளுமன்றுக்குக் கூட்டி வரப்படாமையை நியாயப்படுத்தி பொதுஜனப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர உரையாற்றிய போது, அதை மறித்து, திட்டவட்டமான ஓர் உத்தரவைக் கொடுக்கத் தவறிய சபாநாயகரின் போக்கு, உயரிய நாடாளுமன்றத்தின் கௌரவத்தையும் மதிப்பையும் சீரழிக்கும் நடவடிக்கை என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறோம்.

இலங்கை நாட்டின் பிரஜை ஒருவர் என்ற முறையில் சபாநாயகருக்கு ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டி நினைவுபடுத்துவது முக்கியமாகின்றது.

இந்த நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வுகளில் இதே சபாநாயகரை, அப் பதவிக்கு நாடாளுமன்றம் தெரிவு செய்த நிகழ்வை சபாநாயகர் மீள ஞாபகப்படுத்திக் கொள்வது நல்லது.

புதிய சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவு செய்யப்பட்டமையை அடுத்து, அவரைக் கட்சித் தலைவர்கள் பலரும் பாராட்டிப் பேசினர். அப்படிப் பேசியவர்களில் ஒருவர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவரான 'பிள்ளையான்' என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன். அவர் அன்றைய தினம் நாடாளுமன்றுக்கு சிறையில் இருந்துதான் கூட்டி வரப்பட்டார்.

இப்போது ரிஷாத் பதியுதீன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் படி வழங்கப்பட்ட தடுப்புக் காவல் பத்திரத்தின் கீழ்தான் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியபடி அது அரசின் நிர்வாக ரீதியான ஓர் உத்தரவு மட்டுமே. சட்ட – நீதி – துறையின் உத்தரவு கூட அல்ல. சந்தேகத்தின் பேரில் அவருக்கு எதிராக விடுக்கப்பட்ட நிர்வாக ரீதியான உத்தரவு மட்டுமே அது. அவர் மீது பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக் கூட இன்னும் நீதிமன்றத்தில் சுமத்தப்படவில்லை.

ஆனால், கடந்த ஆண்டு நடுப்பகுதிக்குப் பின்னர் தற்போதைய நாடாளுமன்றம் முதன்முதலில் கூடியபோது சிவநேசதுரை சந்திரகாந்தன் நாடாளுமன்றுக்குக் கூட்டி வரப்பட்டபோது அவருக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள், சட்ட ரீதியாகச் சுமத்தப்பட்டிருந்தன. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக வழக்கு விசாரணைகள் கூட நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அத்தகைய சிவநேசதுரை சந்திரகாந்தன் நாடாளுமன்றுக்குக் கூட்டி வரப்படலாம் என்றால், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வெறும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் ரிஷாத்தை நாடாளுமன்றுக்குக் கொண்டு வருவதற்கு ஏன் இத்துணை இழுபறி, பிகு பண்ணல் எல்லாம்...?

ரிஷாத் பதியுதீன் எம்.பியை நாடாளுமன்றுக்குக் கூட்டி வராமல் தடுப்பதற்கு ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு காரணம் கூறப்படுகின்றமையையும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் பட்டவர்த்தனமாகப் போட்டுடைத்திருக்கின்றார்.

முதலில், அது தொடர்பான ஆவணங்களில் சபாநாயகர் கையொப்பமிடவில்லை என்றார்கள்.

பின்னர், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் ரிஷாத் பதியுதீனை விசாரணை செய்த பொலிஸ் இன்ஸ்பெக்டரின் மனைவிக்கும் கொரோனாத் தொற்று, அதனால் பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கும் அவர் மூலம் ரிஷாத் பதியுதீனுக்கும் தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது என்று கூறுகின்றார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிறகு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்போரை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருவது தேசத்தின் பாதுகாப்புக்கு ஆபத்து என்று புதுக் கதை விடுகின்றார்கள் என அவர் சுட்டிக்காட்டினார்.

எது, எப்படியோ, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தினால் நீதி முறைப்படி குற்றம் இழைத்தவராக அறிவிக்கப்பட முன்னர், அவரை சிறையில் அடைத்து, அதன் மூலம் அவர் நாடாளுமன்றத்தில் தமது கடமையை ஆற்ற முடியாது தடுக்கப்பட்டால், அந்தத் தடையைக் களைய வேண்டிய முழுப்பொறுப்பும் கடப்பாடும் சபாநாயகருக்கு உரியது. அந்த வகையில் ரிஷாத் பதியுதீனுக்கு அநீதி இழைக்கப்பட்டால் அந்த தவறுக்கு முழுப் பொறுப்பு சபாநாயகர்தான்.

## ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர் சபையின் தலைவராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவு



ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர் சபையின் தலைவராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவாகியுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 54 ஆவது கூட்டம் நேற்று (புதன்கிழமை) மெய்நிகர் வழியாக நடைபெற்றது.

இதன்போதே, 2021 – 2022 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் சபையின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஜோர்ஜியாவின் திபிலிசியில் முதலில் நடத்தத் திட்டமிடப்பட்ட வருடாந்த கூட்டம் தற்போதைய கொரோனா தொற்று நோயால் மெய்நிகர் வடிவத்தில் நடைபெற்றுள்ளது.

இதேவேளை, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர் சபையின் 55 ஆவது ஆண்டுக் கூட்டம் அடுத்த ஆண்டு கொழும்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் புதிய தவிசாளராக யோகராஜா தெரிவானார்



வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் புதிய தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் புளொட் கட்சியைச் சேர்ந்த தர்மலிங்கம் யோகராஜா போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு பிரதேச சபையின் புதிய தவிசாளருக்கான தேர்தல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

கடந்தமுறை இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை மற்றும் முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் ஆட்சியைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது.

இதற்கமைய சபையின் தவிசாளர் பதவியை ஆட்சிகாலப் பகுதியில் இரண்டரை வருடங்கள் எனப் பங்கிட்டு வகிப்பதற்கு கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் புளொட் மற்றும் ரெலோ கட்சிகளுக்கு இடையில் புரிந்துணர்வு ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

இதன்படி, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் நடராஜசிங்கம் மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர்கள் தமது பதவியை இராஜினாமா செய்திருந்தனர்.

அந்தவகையில் கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் புதிய தவிசாளர் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட நிலையில், நேற்று வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவாகியுள்ளார்.

## முல்லையில் நடந்த சிவகுமார், தனபோகநாயகன் நினைவுக் கிண்ணத்தை வென்றது நியூ பாரதி

முல்லைத்தீவு–முள்ளியவளை,சலஞ்சேர்ஸ் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட சிவகுமார் மற்றும் தனபோக நாயகன் நினைவுக்கிண்ணக் கிரிக்கெட் சுற்றுத்தொடரில், விஸ்வமடு நியூ பாரதி விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

குறிப்பாக 30 அணிகள் பங்குகொண்ட இந்தக் கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டிக்கு விஸ்வமடு நியூ பாரதி விளையாட்டுக்கழகமும், கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழகமும் தெரிவாகியிருந்தன.

இந் நிலையில் கடந்த புதன்கிழமை கேப்பாப்புலவு, கிருஷ்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக் கழகத்தினர் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முத லில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்திருந்தனர்.

அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழக அணியினர், 12ஓவர்களைக்கொண்ட போட்டியில், 07ஓவர்ளை மாத்திரம் எதிர்கொண்டு 34ஓட்டங்களைப் பெற்று சகல விக்கட்டுக்ளையும் இழந்தனர்.

துடுப்பாட்டத்தில் கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழகம் சார்பில் மிராஜ் 08ஓட்டங்களையும், திலக் 06ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் நியூபாரதி விளையாட்டுக் கழகம் சார்பில் சோபன் 03 விக்கெட்டுக்களையும், சுதன், மிது, குணாளன், கின்சிலன்ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தியிருந்தனர்.

இந் நிலையில் 35 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய விஸ்வமடு நியூபாரதி விளையாட்டுக் கழகத்தினர், நான்கு ஓவர்களை மாத்திரம் எதிர்கொண்டு பத்து விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் நியூபாரதி விளையாட்டுக்கழகம் சார்பில் சதீஸ் 15 ஓட்டங்களையும், சுதன் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

அதேவேளை இப்போட்டியில் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்திய நியூபாரதி விளையாட்டுக்கழக வீரர் சோபன் இப்போட்டியின் ஆட்ட நாயகனாகத் தேர்வுசெய்யப்பட்டார்.

அந்தவகையில் இப்போட்டியில் வெற்றி பெற்ற நியூபாரதி விளையாட்டுக்கழகத்திற்கு சிவகுமார், தனபோகநாயகன் நினைவுக் கிண்ணமும் 3.3 லட்சம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டதுடன், கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழகத்திற்கு இரண்டாம் நிலைக்குரிய கிண்ணமும் 20ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கிவைக்கப்பட்டது.

மேலும் இந் நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் வடமாகணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், கரைதுறைப்பற்று பிரதேசசபை தவிசாளர் க.விஜிந்தன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், இ.ஜெகதீசன், சர்வோதயம் நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் முள்ளியவளை கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிவகுமார், தனபோக நாயகன் ஆகியோரின் பெற்றோர்கள் உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மதுவரித் திணைக்களத்தால் சுகாதார நடைமுறை அறிவிப்பு

நாடளாவிய ரீதியில் உள்ள கலால் உரிமம் பெற்ற இடங்களுக்கு மதுவரி திணைக்கள ஆணையாளரால் சுகாதார நடைமுறைகள் சில வெளியிடப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் மதுபான நிலையங்கள், விடுதிகள் மற்றும் ஹோட்டல் உட்பட மதுபானம் விற்பனை செய்யும் இடங்களில் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# மூன்றாவது அலையைத் தவிர்க்க முடியாது!
## மத்திய அரசின் அறிவியல் ஆலோசகர் எச்சரிக்கை

கொரோனா வைரஸின் இரண்டாவது அலையே ஓயாத நிலையில், 'மூன்றாவது அலை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. அதற்கு நாம் இப்போதே தயாராக வேண்டும்' என மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் விஜயராகவன் கூறியிருப்பது நாடெங்கிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கொரோனா வைரஸ் முதல் அலையைக் காட்டிலும் இரண்டாவது அலை மிகக் கடுமையாக உள்ளது. தினசரி தொற்று 4 லட்சத்தை நெருங்கிய நிலையில், மொத்தப் பாதிப்பு 2 கோடியைத் தாண்டி விட்டது. கடந்த சில நாள்களாக இறப்பு எண்ணிக்கை கணிசமாக அதிகரிப்பது மக்களை பீதிக்குள்ளாக்கி இருக்கிறது. மருத்துவமனைகள் நிரம்பி, ஒக்சிஜன் தட்டுப்பாடு ஏற்பட்டு நோயாளிகள் மிகுந்த சிரமப்பட்டு வருகின்றனர். கார்களில் மருத்துவ ஒக்சிஜன் சிலிண்டர் பொருத்தி அவற்றையே தற்காலிக கொரோனா விடுதியாக மாற்றி, குடும்பத்தினர் உயிரைக் காப்பாற்ற மக்கள் போராடி வருகின்ற செய்திகள் வெளியாகின்றன.

இப்படிப்பட்ட நிலையில், 'மூன்றாவது அலை தவிர்க்க முடியாதது!' என மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் விஜயராகவன் கூறி இருக்கின்றமை அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அவர் நேற்று அளித்த பேட்டியில் 'கர்நாடகா, கேரளா,



ஆந்திரா, தமிழ்நாடு, மேற்கு வங்கம், ராஜஸ்தான், பீகார் ஆகிய மாநிலங்களில் தினசரி பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது. இரண்டாவது அலை கொரோனா வைரஸ் மிகத் தீவிரமாக இருப்பதை பார்க்கும் போது, மூன்றாவது அலை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்று தெரிகிறது. நீண்டகால கொரோனா அலைகள் இந்தளவுக்கு தீவிரமாக இருக்குமென இதற்கு முன் கணிக்கப்படவில்லை. ஆனால், மூன்றாவது அலை எப்போது ஏற்படும் என்பதைத் துல்லியமாகக் கூற முடியாது. இருந்தாலும், புதிய அலையை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும்.

புதிய உருமாற்ற வகைகளையும் தடுக்கக் கூடிய வகையில் தடுப்பூசியை மேம்படுத்த வேண்டும். அதிகளவில் தடுப்பூசி போடுவதை ஊக்கப்படுத்த வேண்டும். புதிய உருமாற்ற வைரஸ்கள் அசல் திரிபுகளைப் போலவே பரவுகின்றன. அவை புதிய வகையான பரிமாற்றத்தின் பண்புகளைக் கொண்டிருக்கவில்லை. அசல் திரிபுகளைப் போலவே மனிதர்களைப் பாதி க்கின்றன. ஆரம்பத்தில் வேகமாக பரவி, வைரஸ் நகல்களை உருவாக்குகின்றன' என அவர் கூறியுள்ளார்.

எய்ம்ஸ் இயக்குநர் ரன்தீப் குலேரியா, "கொரோனாவின் தீவிரத்தை கட்டுப்படுத்த முழு ஊரடங்கு மட்டுமே ஒரே தீர்வாகும். இங்கிலாந்தைப் போல கடுமையான ஊரடங்கு பிறப்பிக்கப்பட வேண்டும். இரவு நேர ஊரடங்கு, பகுதி நேர ஊரடங்கு போன்றவை முழுப் பலனைத் தராது. குறைந்தபட்சம் இரு வார கடுமையான ஊரடங்கு அவசியம். மூன்றாவது அலை ஏற்பட வாய்ப்புகள் நிறைய உள்ளன. ஆனால், அதற்குள் நாம் அதிகளவில் தடுப்பூசியைப் பெற்றிருப்போம். அதனால் அடுத்தடுத்த அலைகளை ஓரளவுக்கு எளிதாகச் சமாளிக்கலாம்" என தெரிவித்திருக்கிறார்.

# இந்தியாவில் கொரோனா இறப்பு 4 வாரத்தில் 4 லட்சமாக அதிகரிக்கும்!



கொரோனாவின் இரண்டாவது அலை தீவிரமாக இருக்கும் நிலையில், இன்னும் 4 வாரங்களில் மொத்த சாவு 4 லட்சத்தை தாண்டும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். கொரோனா இரண்டாவது அலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது. கடந்த 13 நாள்களில் தினசரி பாதிப்பு 4 லட்சத்துக்கு சற்று குறைவாகவும் பலி எண்ணிக்கை மூவாயிரத்துக்கு அதிகமாகவும் பதிவாகி வருகிறது.

இரண்டாவது அலை உச்சமடைந்துள்ள நிலையில், அடுத்த நான்கு வாரங்கள் மிக மிக சவாலானவை என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். பெங்களூர் ஐ.ஐ.டியை சேர்ந்த குழுவினர் கணித முறைப்படி கொரோனா இறப்பு விகிதத்தை கணித்துள்ளனர். அதன்படி, தற்போதுள்ள நிலை நீடித்தால் ஜூன் 11ஆம் திகதி நாட்டின் மொத்தப் பலி நான்கு லட்சத்து நான்காயிரமாக அதிகரிக்கும் என கூறப்பட்டுள்ளது. வொஷிங்டன் பல்கலைக்கழகத்தின் சுகாதார அளவீடுகள் மற்றும் மதிப்பீட்டு நிறுவனம் தனது கணிப்பில், இந்தியாவில் ஜூலை மாதம் கொரோனா பலி பத்து லட்சத்து பதினெட்டாயிரத்து 879 ஆக அதிகரிக்கும் என கூறியுள்ளது.

ஜோன் ஹோப்கின்சனின் மூத்த நிபுணர் ஜெனிபர் நுஸ்ஸோ கூறுகையில், "இந்தியாவில் தற்போது தினசரி கிட்டத்தட்ட 4 லட்சம் பேர் பாதிக்கப்படுகின்றனர். ஆனால் இந்த எண்ணிக்கை துல்லியமானது என்று கூறி விட முடியாது. இதில் விடுபட்ட பலர் கொரோனாவுடன் பொது இடங்களில் நடமாடிக் கொண்டிருக்கலாம். சில மாநிலங்களில் மொத்த மக்கள் தொகையில் 40 சதவீத மானோருக்குக்கூட பாதிப்பு இருக்கிறது. இதில் பயப்பட வேண்டிய வியம் பரிசோதனை செய்யாமல் தப்பியவர்கள் பற்றித்தான்" என்று தெரிவித்திருக்கிறார்.

எனவே தற்போதைய நிலையில் ஊடரங்கு அவசியம் என நிபுணர்கள் வலியுறுத்தி உள்ளனர். இண்டியன் இன்ஸ்டிடியூட் ஒஃப் சயின்ஸ் தனது கணிப்பில் '15 நாள்கள் முழு ஊரடங்கை அமுல்படுத்தினால், பலி எண்ணிக்கையை மூன்று லட்சமாகவும், 30 நாள் ஊரடங்கை விதித்தால் 2.85 லட்சமாகவும் குறைக்கலாம்' என கூறி உள்ளது. அதே சமயம் ஜூலையில் உலக அளவில் பலி எண்ணிக்கை குறைந்தபட்சம் 9 லட்சத்து 40 ஆயிரமாக இருக்கும் என ஆய்வு முடிவுகள் கூறி உள்ளன.

தடுப்பூசியே மக்களின் உயிரைக் காக்கும் முக்கிய சக்தியாக இருந்தாலும், அதன் மூலம் நோய் எதிர்ப்பு கிடைப்பதற்கு நள்களாகின்றன. எனவே, மாஸ்க் அணிதல், சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல், பொது இடங்களுக்கு செல்வதை கூடுமான வரை தவிர்த்தல் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மக்கள் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும் என கூறும் ஆய்வாளர்கள், கொரோனா வைரஸ் எப்படி திடீரென அதிகரிக்கிறது, அதன் பரவல் தீவிரமடைய காரணம் என்ன என்பதைப் பற்றி எல்லாம் இன்னும் முழுமையாக புரிந்து கொள்ள முடியவில்லை எனவும் எச்சரித்துள்ளனர். கொரோனா பாதிப்பால் நேற்று ஒரே நாளில் நாடு முழுவதும் 3,780 பேர் பலியாகி உள்ளனர். இதுவே தினசரி இறப்பில் அதிகபட்சமாகும். இதனால் மொத்த இறப்பு எண்ணிக்கை 2 லட்சத்து 26 ஆயிரத்து 188 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் நாடு முழுவதும் 3 லட்சத்து 82 ஆயிரத்து 315 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த இரு நாள்களாக பாதிப்பு எண்ணிக்கை குறைந்து வந்த நிலையில், நேற்று சற்று அதிகரித்துள்ளது. மொத்த பாதிப்பு 2 கோடியே 6 லட்சத்து 65 ஆயிரத்து 148 ஆக அதிகரித்துள்ளது. சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 34 லட்சத்து 87 ஆயிரத்து 229 ஆக அதிகரித்துள்ளது. நேற்று ஒரே நாளில் 3 இலட்சத்து 38 ஆயிரத்து 439 பேர் குணமடைந்துள்ளனர். மொத்த குணமடைந்தோர் எண்ணிக்கை 1 கோடியே 69 லட்சத்து 51 ஆயிரத்து 731 ஆக அதிகரித்துள்ளது.

உலகிலேயே அதிகபட்சமாக அமெரிக்காவில் 5 இலட்சத்து 78 ஆயிரத்து 500 பேர் பலியாகி உள்ளனர். பிரேஸிலில் 4 லட்சத்து 11 ஆயிரத்து 588 பேர் இறந்துள்ளனர். இரண்டு லட்சத்து 26 ஆயிரத்து 188 பலியுடன் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

# பிரபல நடிகர் பாண்டு இன்று காலமானார்



சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் பிரபல நகைச்சுவை, குணச்சித்திர நடிகரும் ஓவியருமான பாண்டு காலமானார்.

தமிழகத்தில் அதிகரித்து வரும் கொரோனாப் பாதிப்பால் உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. அரசியல் தலைவர்கள், திரையுலகப் பிரபலங்கள் பலரும் அடுத்தடுத்து கொரோனாவால் உயிரிழந்து வருகின்றனர். மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், தமிழ்த் திரையுலகின் பிரபல நகைச்சுவை மற்றும் குணச்சித்திர நடிகரான பாண்டு தனது 74ஆவது வயதில் இன்று அதிகாலை காலமானார்.

கொரோனாப் பாதிப்பின் காரணமாக பாண்டு மற்றும் அவரது மனைவி குமுதா இருவரும் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்தனர். அவர்கள் தீவிர கண்காணிப்பில் இருந்தபோது, இன்று அதிகாலை பாண்டுவின் உயிர் பிரிந்தது என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அவரது மனைவி குமுதாவுக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாண்டு – குமுதா தம்பதியினருக்கு பிரபு, பஞ்சு மற்றும் பின்டு ஆகிய மூன்று மகன்கள் உள்ளனர். கப்பிடல் லெட்டர்ஸ் எனும் விளம்பர, வடிவமைப்பு நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்தி வந்த பாண்டு, பல்வேறு திரையுலக பிரபலங்களின் இல்லங்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளை அழகுற வடிவமைத்து வந்தார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியை வடிவமைத்ததும் பாண்டுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

நகைச்சுவை, குணச்சித்திர நடிகரான பாண்டு அவரது பேச்சு, வித்தியாசமான சிரிப்பு மற்றும் நடிப்பால் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தவர். அவரது திடீர் மறைவு திரைத்துறையினர் மற்றும் ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவரது மறைவுக்கு திரைத்துறையினர் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# முகக்கவசம் அணியாமல் பால்குடம் தூக்கி ஊர்வலம்
## குஜராத்தில் கொரோனா விதிகளை மீறிய பக்தர்கள்

ஹரித்துவார் கும்பமேளாவில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளைக் காற்றில் பறக்கவிட்டு லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர். இதனால், கொரோனாப் பரவல் தீவிரமடைந்த நிலையில், மத வழிபாட்டு நிகழ்ச்சிகளுக்கு பல மாநிலங்களும் தடை விதித்துள்ளன.

இந்நிலையில், குஜராத் மாநிலத்தில் கொரோனாத் தடுப்பு விதிகளை மீறி உரிய அனுமதியின்றி நேற்று நூற்றுக்கணக்கான பெண் பக்தர்கள் பங்கேற்று மத வழிபாட்டு நிகழ்ச்சி அரங்கேறியுள்ளது.

அகமதாபாத் மாவட்டம் நவபுரா கிராமத்தில் நூற்றுக்கணக்கான பெண் பக்தர்கள் முகக்கவசம் அணியாமல் பால்குடம் தூக்கி ஊர்வலமாகச் சென்று நேர்த்திக்கடன் செலுத்தியுள்ளனர். இதனால், அப்பகுதியில் வைரஸ் பாதிப்பு பல மடங்கு அதிகரிக்கலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த காவல் துறையினர் இருபதுக்கும் மேற்பட்டோரை கைது செய்துள்ளனர் என செய்திகள் வெளி வந்துள்ளன.

# கோபம் மற்றும் மன அழுத்தத்தால் 61 வீதம் இந்தியர்கள் பாதிப்பு

கொரோனா இரண்டாவது அலையின் பலி எண்ணிக்கை அதிகரிப்பதாகவும், ஒக்சிஜன் மற்றும் மருத்துவமனைகளில் இடமின்றி மக்கள் தவிக்கின்றனர் என தினசரி பல்வேறு செய்திகள் வருகின்றன.

இந்நிலையில், மக்களின் மன நிலை தொடர்பான ஆய்வு முடிவு ஒன்று தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அதில், 61 சதவீத இந்தியர்கள் கோபம், அதிருப்தி, மன நெருக்கடி, கவலை போன்றவற்றில் ஆழ்ந்திருக்கின்றது எனவும் தரவுகள் பதிவாகி யுள்ளன.

கொரோனாவைக் கையாளுதல் பற்றிய வினாக்கள் மக்கள் மத்தியில் கேட்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில், இந்தியா கொரோனாவை முறையாகக் கையாளவில்லை என 45 சதவீதம் பேரும், சரியான பாதையில் செல்வதாக 41 சதவீதம் பேரும் கூறி உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவர் பள்ளிக்குள் புகுந்து கத்தியால் தாக்கிய இளைஞன்

## பிரேஸிலில் 5 பேர் உயிரிழப்பு




பிரேஸிலின் தெற்குப் பகுதியில் உள்ள சாண்டா கேடரினா மாகாணத்தின் சவுடேட்ஸ் நகரில் உள்ள மழலையர் பள்ளி ஒன்று உள்ளது. இங்கு நேற்று காலை வழக்கம் போல் வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன. அப்போது 18 வயதான இளைஞன் ஒருவன் கையில் கத்தியுடன் மழலையர் பள்ளிக்குள் நுழைந்தார். அவன் பள்ளியின் நுழைவு வாயிலில் நின்று கொண்டிருந்த ஆசிரியை ஒருவரை கத்தியால் சரமாரியாக வெட்டினார். இதில் அவர் ரத்த வெள்ளத்தில் சரிந்து துடிதுடித்து இறந்தார்.

ஆசிரியையின் அலறல் சத்தம் கேட்டு சக ஆசிரியைகள் மற்றும் ஆசிரியர்கள் வெளியே வந்துபார்த்தபோது இளைஞன் ரத்தம் படிந்த கத்தியுடன் நிற்பதை கண்டதும் அவர்கள் வகுப்பறைகளில் உள்ள குழந்தைகளை காப்பாற்றுவதற்காக வகுப்பறைகளுக்குள் ஓடிச் சென்று கதவுகளை பூட்டி கொண்டனர்.

ஆனாலும் அந்த இளைஞன் ஒரு வகுப்பறையின் கதவை உடைத்து உள்ளே நுழைந்து அங்கிருந்த குழந்தைகளையும் ஆசிரியை ஒருவரையும் பட்டா கத்தியால் சரமாரியாக வெட்டினார். இதில் 2 வயதுக்குட்பட்ட 3 குழந்தைகளும் ஒரு ஆசிரியையும் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் சரிந்து துடிதுடித்து பரிதாபமாக இறந்தனர். மேலும் ஒரு குழந்தை பலத்த காயமடைந்தது.

இதற்கிடையில் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் பள்ளியில் கத்தி தாக்குதல் நடப்பதாக பொலிஸுக்கு தகவல் கொடுத்தனர். அதன்பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார் பள்ளியை சுற்றி வளைத்து தங்கள் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வந்தனர்.

பின்னர் அவர்கள் இந்த கொடூர தாக்குதலை நிகழ்த்திய இளைஞனை கைது செய்ய முற்பட்டனர். ஆனால் இளைஞன் பொலிஸுக்கு பயந்து பட்டா கத்தியால் தன்னைத் தானே வெட்டிக் கொண்டார். இதில் படுகாயம் அடைந்த அந்த இளைஞன் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். அதேபோல் இந்த பட்டாக்கத்தி தாக்குதலில் படுகாயமடைந்த ஒரு குழந்தையும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றது. இந்த தாக்குதலுக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவராத நிலையில் பொலிஸார் இதுபற்றி தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதேசமயம் தாக்குதல் நடத்திய இளைஞனின் பெயர் உள்ளிட்ட விவரங்களை பொலிஸார் வெளியிடவில்லை.

இதனிடையே மழலையர் பள்ளியில் நடந்த இந்த கோர சம்பவத்துக்காக சாண்டா கேடரினா மாகாணத்தில் 3 நாள்களுக்கு துக்கம் அனுஷ்டிக்கப்படும் என மாகாண அரசு அறிவித்துள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ரியோ டி ஜெனிரோ நகரில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் மர்மநபர்கள் 2 பேர் புகுந்து நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 5 மாணவர்கள், ஒரு ஆசிரியை மற்றும் பள்ளி நிர்வாக ஊழியர் ஒருவர் என 7 பேர் கொல்லப்பட்டமை நினைவு கூரத்தக்கது.

## இஸ்ரேலில் ஆட்சி அமைக்க

## பெஞ்சமினுக்கு வழங்கிய காலக்கெடு முடிவடைந்தது

இஸ்ரேலில் கடந்த 2019 ஆம் ஆண்டிலிருந்து 3 முறை, பொதுத்தேர்தல் நடைபெற்றும் எந்த கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி 4 ஆவது முறையாக பொதுத் தேர் தல் நடந்தது.

இதிலும் பிரதமர் பெஞ்சமின் நேட்டன்யாஹூவின் லிக்குட் கட்சி வெற்றி பெற்றபோதிலும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதேபோல் எதிர்க்கட்சிகளுக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இதனால் பெஞ்சமின் நேட்டன்யாஹூ ஆட்சி அமைப்பதற்கு சிறிய கட்சிகளின் ஆதரவைப் பெற வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டார். இந்த நிலையில் இஸ்ரேல் அதிபர் ருவன் ரிவ்லின், ஆட்சி அமைக்க பெஞ்சமின் நேட்டன்யாஹூவுக்கு 28 நாள் காலக்கெடு விதித்தார். இந்தநிலையில் ஆட்சி அமைப்பதற்கு பெஞ்சமின் நேட்டன்யாஹூவுக்கு வழங்கப்பட்ட 28 நாள் காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்தது.

இனி அதிபர் ருவன் ரிவ்லின், நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் லிக்குட் கட்சிக்கு அடுத்தபடியாக 2வது இடத்தைப் பிடித்த யேஷ் அதித் கட்சியின் தலைவர் யெய்ர் லாப்பிட்டுக்கு புதிய அரசு அமைக்க 28 நாள் காலக்கெடு வழங்குவார். அவரும் 28 நாள்களுக்குள் ஆட்சி அமைக்கத் தவறினால், நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஒருமனதாக தேர்வு செய்யப்படும் ஒரு வேட்பாளரிடம் பெரும்பான்மையை நிரூபிக்க அதிபர் ருவன் ரிவ்லின் கேட்பார். அதுவும் நடக்க வில்லை என்றால் மீண்டும் பொதுத் தேர் தலை நடத்த அதிபர் ருவன் ரிவ்லின் உத்தரவிடுவார். அப்படி நடந்தால் அது இஸ்ரேலில் 2 ஆண்டுகளில் நடக்கும் 5வது பொதுத்தேர்தலாக இருக்கும்.

## டுவிட்டர், பேஸ்புக் கணக்குகள் முடக்கம்

### புதிதாக வலைத்தளத்தை தொடங்கிய ட்ரம்ப்

அமெரிக்காவில் கடந்த ஜனவரி மாதம் 6 ஆம் திகதி, முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பின் ஆதரவாளர்கள் நூற்றுக்கணக்கானோர் நாடாளுமன்றத்துக்குள் புகுந்து கலவரத்தில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம் உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நாடாளுமன்ற வன்முறை தொடங்குவதற்கு முன்பும் வன்முறை நடந்து கொண்டிருந்தபோதும் ட்ரம்ப் சமூக வலைதளங் களில் தேர்தல் முறைகேடு தொடர்பாக பல்வேறு பதிவு களை வெளியிட்டார். இதனால் ட்ரம்ப் வன்முறையை தூண்டினார் எனக் கூறி டுவிட்டர், பேஸ்புக், இன்ஸ்டா கிராம் மற்றும் யூடியூப் ஆகிய சமூக வலைத்தள நிறுவனங்கள் அனைத்தும் ட்ரம்பின் கணக்கை நிரந்தரமாக முடக்கின.

இந்த சூழலில் ட்ரம்ப் மிகவிரைவில் தனக்கென சொந்தமாக ஒரு தளத்தை அமைத்து சமூக ஊடகத்துக்கு திரும்புவார் என அவரது ஆலோசகர் ஜாசேன் மில்லர் கடந்த சில வாரங்களுக்கு முன்பு தெரிவித்தார். அதன்படி ட்ரம்ப் தற்போது புதிதாக தகவல் தொடர்பு வலைத்தளம் ஒன்றைத் தொடங்கியுள்ளார். இந்த வலைத்தளத்தில் உலகம் முழுவதிலிருந்தும் மக்கள் ட்ரம்பின் பதிவுகளுக்கு ‘லைக்’ செய்வது மற்றும் கருத்து தெரிவிப்பதோடு அவற்றை டுவிட்டர், பேஸ்புக் உள்ளிட்டவற்றிலும் பகிர முடி யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் ட்ரம்பின் ஆலோசகர் ஜாசேன் மில்லர் முன்னர் கூறியது போல இது ஒரு சமூக வலைத்தளம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரே பிரசவத்தில் ஒன்பது குழந்தைகளை பெற்றெடுத்த மாலி நாட்டு இளம்பெண்



பொதுவாக ஒரு கருவில் இரண்டு குழந்தைகள் உருவாவதுண்டு. அதையும் மீறி சில நேரங்களில் மூன்று, நான்கு கூட. அபூர்வமாக நான்கு குழந்தைகளுக்கு மேலும் உருவாகும்.

இதையெல்லாம் மீறி ஆபிரிக்க நாடான மாலியைச் சேர்ந்த பெண்ணிற்கு ஒரு கருவில் 9 குழந்தைகள் உருவாகி, தற்போது அறுவை சிகிச்சை மூலம் 9 குழந்தைகளையும் பெற்றெடுத்தார்.

அவர் கர்ப்பமாக இருந்தபோது மருத்துவமனையில் பரிசோதனைக்குச் சென்றுள்ளார். அப்போது ஸ்கேன் எடுத்து பார்த்த வைத்தியர்களுக்கு ஆச்சர்யத்துடன் கலந்த அதிர்ச்சி காத்திருந்தது. அதாவது, கருவில் ஏழு குழந்தைகள் உருவாகியிருந்தமை தெரியவந்தது.

இதனால் ஹலிமா சிஸ் என்ற 25 வயதான அந்த இளம் பெண்ணுக்கு ஆரோக்கியமாக குழந்தைகள் பிறக்க வைத்தியர்கள் முக்கிய கவனம் செலுத்தினர். குழந்தைகள் ஆரோக்கியத்துடன் பிறப்பதற்கும், இந்த பெண்ணின் உடல்நலத்தைக் கருத்தில் கொண்டும் மொரோக்கோவிற்கு அழைத்துச் சென்று பிரசவம் பார்க்க வேண்டும் என வைத்தியர்கள் வலியுறுத்தினர். இதனால் அரசு தலையிட்டு அந்த பெண்ணை மொரோக்கோவிற்கு அழைத்து சென்றது. இந்த நிலையில் அவருக்கு அறுவை சிகிச்சை மூலம் பிரசவம் நடைபெற்றது. அப்போது வைத்தியர்களுக்கு பேரின்ப அதிர்ச்சி. அவரது கருப்பையில் 9 குழந்தைகள் இருந்தன. 9 குழந்தைகளையும் அறுவை சிகிச்சை மூலம் எடுத்தனர். இதில் நான்கு ஆண் குழந்தைகளும், ஐந்து பெண் குழந்தைகளும் அடங்கும். 9 குழந்தைகள் என்பதாலும், குழந்தைகள் ஆரோக்கியத்துடன் இருப்பதற்கு கடினம் என்பதாலும் பல நாள்கள் மொரோக்கோவில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றபின், மாலி திரும்ப இருக்கிறார்.

## இந்தியாவில் இருந்து அரிசி ஏற்றிச் சென்ற சரக்கு கப்பல் ஊழியர்களுக்கு கொரோனா



இந்தியாவில் இருந்து அரிசி ஏற்றிக் கொண்டு தென்ஆபிரிக்காவின் டர்பன் துறைமுகத்துக்கு சரக்கு கப்பல் ஒன்று கடந்த 2 ஆம் திகதி போய் சேர்ந்தது. இதில் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த ஊழியர்கள் பலர் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்த கப்பல் ஊழியர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொண்டதில், 14 ஊழியர்கள் தொற்றுக்கு ஆளாகி இருந்தமை உறுதி செய்யப்பட்டு உள்ளது. இதனால் அந்த கப்பல் துறைமுகத்திலேயே தனிமைப்படுத்தப்பட்டு உள்ளது. கப்பலில் இருந்து வெளியேயும், கப்பலுக்கு உள்ளேயும் செல்ல யாருக்கும் அனுமதி இல்லை என அறிவிக்கப்பட்டு உள்ளது.

முன்னதாக இந்தக் கப்பல் துறைமுகத்தை அடைந்தவுடன் அதில் இருந்த பொருள்களை இறக்கும் பணியில் 200இற்கும் மேற்பட்ட துறைமுக ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். எனவே அவர்கள் அனைவருக்கும் கொரோனா பரிசோதனைகள் நடந்து வருகின்றன. இதைப்போல கப்பல் ஊழியர்களுடன் தொடர்பில் இருந்தவர்களையும் கண்டறிந்து பரிசோதிக்கும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டு உள்ளன.

இந்தக் கப்பலில் பணியில் இருந்த தலைமை பொறியாளர் செல்லும் வழியிலேயே உயிரிழந்து விட்டார். ஆனால் அவர் மாரடைப்பால்தான் உயிரிழந்தார் எனவும், அவருக்கு தொற்று பாதிப்பு இல்லை என்றும் கப்பல் நிர்வாகம் கூறியுள்ளது.

# மட்டக்களப்பில் 14 நாள்களில் 190 கொரோனாத் தொற்றாளர்கள்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)
மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 நாள்களில் 190 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் ஒரு வாரத்தில் 143 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று காலை நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றாவது அலையில் 14 நாள்களில் 190 பேர் தொற்றுக்குள்ளானதாகவும் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 143 பேர் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கொவிட் சிகிச்சை நிலையங்கள் முற்றுமுழுதாக நிரம்பியுள்ளதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இனங்காணப்படும் கொரோனாத் தொற்றாளர்கள் வேறு மாவட்டங்களுக்கு அனுப்பவேண்டிய நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் 30 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களின் 12 பேர் களுவாஞ்சிகுடியிலும் 09 பேர் மட்டக்களப்பிலும் 05 பேர் செங்கலடி பகுதியிலும் 04 பேர் காத்தான்குடியிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,173 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் இவர்களின் 1,020 பேர் குணமடைந்து வீடு சென்றுள்ளனர்.

143 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகின்றனர். இதுவரையில் 10 மரணங்கள் ஏற்பட்டுள்ளன.

மூன்றாவது அலையினைப் பொறுத்தவரையில் 14 நாள்களில் 190 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதிலும் இறுதி ஏழு நாள்களும் 143 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். மூன்றாவது அலை காரணமாக ஒரு மரணம் ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று கொரோனா சிசிச்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. காத்தான்குடி, கரடியனாறு, பெரியகல்லாறு ஆகிய இந்த மூன்று வைத்தியசாலைகளும் 400 நோயாளர்களை பராமரிக்கக் கூடிய வகையில் உள்ளன.

இந்தமூன்றுவைத்தியசாலைகளும் முற்று முழுதாக நிரம்பிய நிலையில் காணப்படுகின்றன. இதன்காரணமாக புதிதாக அடையாளம் காணப்படுபவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் 1,000 கட்டில்களை அதிகரிக்குமாறு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் ஒரு வாரகாலத்திற்குள் நூறு கட்டில்களை அதிகரிக்கவுள்ளோம்.

கொரோனா மூன்றாவது அலையின் காரணமாக ஒட்சிசன் தேவைப்பாடு அதிகளவில் காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒட்சிசன் சிலிண்டர்கள் தயார் நிலையில் உள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒட்சிசன் திட்டம் இல்லாத காரணத்தினால் ஒட்சிசன் தேவைக்காக மகாஓயா, தெகியத்தன்கண்டிய பகுதிகளில் இருந்து ஒட்சிசனை எடுத்துவரவேண்டியுள்ளது. ஒரு ஒட்சிசன் தொகுதியை நிறுவுவதற்கு 4.2 கோடி ரூபா தேவைப்படுகின்றது. அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

கொவிட் தொற்றாளர்கள் தீவிரமான நிலையினையடைந்து நியுமோனியாவுக்குதள்ளப்படும்போது அவர்களை பராமரிப்பதற்காக காத்தான்குடி, களுவாஞ்சிகுடி, வாழைச்சேனை போன்ற வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப் பிரிவையும் நிறுவவுள்ளோம். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஏழு நாள்களில் அவை செயற்பாட்டுக்கு வருமெனவும் தெரிவித்தார்.

## கொரோனாத் தடுப்பு செயலணிக் கூட்டம்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாவின் மூன்றாவது அலையின் பின்னர் மூன்றாவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட கொவிட் தடுப்பு செயலணியின் விசேட கூட்டம் இன்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் செயலணியின் தலைவருமாகிய கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான மாவட்டத்தின் தற்போதைய நிலை தொடர்பாகவும், நோயாளர்களுக்கான இடப்பற்றாக்குறை மற்றும் குணமடைந்து சொந்த இடங்களுக்கு திருப்பியனுப்பப்படுவோருக்கான போக்குவர வசதிகள், இக் காலகட்டத்தில் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் எனவும் அதற்காக அரச நிறுவனங்களின் முன்னேற்பாடுகள் தெடர்பாகவும் ஆராயப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

கூட்டத்தின் நிறைவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மாவட்ட அரசாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கையில், நேற்றைய தினம் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தில் மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் சில உத்தியோகத்தர்கள் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளமை இனங்காணப்பட்டதனால் அநேகமான உத்தியோகத்தர்களை சேவைக்கு அழைக்காமல் முக்கியமான ஒருசில உத்தியோகத்தர்களைக் கொண்டு பிரதேச செயலகத்தின் நாளாந்த சேவைகளை செய்து கொண்டு இருக்கின்றோம் என தெரிவித்தார்.

அதேவேளை வெளிமாவட்டத்தில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட கொவிட் நோயாளர்கள் சிலர் சிகிச்சை முடிந்து வீடு திரும்ப வேண்டியுள்ளதாகவும், அவர்களுக்கான போக்குவரத்து வசதி இன்மையால் அவர்கள் தொடர்ந்து அந்தந்த வைத்தியசாலையிலேயே இருப்பதால் அவர்களை அங்கு தொடர்ந்து வைத்திருப்பதன் காரணமாக எமது மாவட்டத்தில் இனங்காணப்படுகின்ற நோயாளிகளை இங்கு அனுமதிப்பதற்கு முடியாதுள்ளமை தொடர்பாக இதன் போது மேஜர் ஜெனரல் நலின் கொஸ்வத்த அவர்களிடம் சுட்டிக்காட்டப்பட்டதாகவும், அதற்காக இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் அந் நோயாளர்களை அந்தந்த மாவட்டங்களுக்கு கொழும்பு, கம்பஹா, அனுராதபுரம் போன்ற அவர்களது சொந்த மாவட்டங்களுக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கையினை உடனடியாக மேற்கொள்ளப்படும் எனவும் கூறியிருந்தார். கறுவனாறு, கல்லாறு மற்றும் காத்தான்குடி போன்ற வைத்தியசாலைகளிலே இவர்கள் சென்றதன் பின்னர் போதியளவு கட்டில்கள் காணப்படுமெனவும் தெரிவித்தார்.

# பேரணியில் கலந்துகொண்டது தவறு அதற்காக இப்போது வருந்துகிறேன்

### முன்னாள் எம்.பி.நஸீர் தெரிவிப்பு




பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியில் கலந்துகொண்டது தவறு என்று இப்போது வருந்துகிறேன் என முன்னாள் எம்.பி. நஸீர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களுக்கு செய்த அநியாயங்களை மறந்து சகிப்புத் தன்மையுடன் இன ஒற்றுமைக்காக விட்டுக் கொடுப்புகளைச் செய்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் போன்ற தமிழ் அரசியல் வாதிகள் முஸ்லிம்களுக்கு எதிராகவே செயற்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். நேற்று புதன் கிழமை அட்டாளைச்சேனையில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்.

யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்கள் 30 ஆண்டுகாலமாக சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்கிறார்கள். கல்முனையில் இருக்கின்ற பிராந்திய சுகாதார பணிமனை முஸ்லிம்களுக்கு மாத்திரம் சேவை செய்யும் நிலையமல்ல இங்கு தமிழ் பேசும் மக்களுக்கான சேவை நடைபெறுகிறது. இதன் பணிப்பாளராக ஒரு தமிழ் சகோதரர் கடமையாற்றுகின்றார். இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்திற்கு இருக்கின்ற ஒரேயொரு வர்த்தக கேந்திர நிலையம் கல்முனையாகும். தமிழர்களுக்கு என்று மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் என்று பல நகரங்கள் இருக்கின்ற நிலையில் முஸ்லிம்களுடைய ஒரு சொற்ப நிலத்தை நீங்கள் அபகரிக்க எத்தனிப்பது உங்களுடைய பாசிசத்தை தெட்டத் தெளிவாக்கியுள்ளது. எனவே உங்களது குறுகிய சிந்தனைகளையும் இனவாதத்தையும் கைவிட வேண்டும். சாணக்கியன் ஒரு சிறந்த அரசியல் வாதி என்ற நன் நோக்கில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான சாத்வீக போராட்டத்தில் நான் கலந்து கொண்டேன். அது தவறு என்று இப்போது வருந்துகிறேன். கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக எமது கட்சி தலைவரோடும் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் அவர்களோடும் பேச்சு மூலம் தீர்வுகளை பெறுவதற்கு தமிழ் மக்கள் முன்வரவேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.நஸீர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாணத்திலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளை கொரோனா சிகிச்சை மையங்களாக மாற்றுக

### கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா உத்தரவு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிழக்கு மாகாணத்தில் உள்ள ஏழு ஆயுர்வேத வைத்தியசாலைகளை கொவிட் - 19 சிகிச்சை மையங்களாக மாற்றுமாறு ஆளுநர் அனுராதா யஹம்பத் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ளுமாறு கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி ஆர்.ஸ்ரீதருக்கு ஆளுநர் அறிவுறுத்தி யுள்ளார்.

இதற்கமைய, கிழக்கு மாகாணத்திலுள்ள 283 கொரோனா நோயாளிகளுக்காக இந்த ஆயுர் வேத வைத்தியசாலைகளில் சிகிச்சை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

திருகோணமலை, கப்பல்துறை ஆயுர்வேத தள வைத்தியசாலையில் 50 பேருக்கும், நிலாவேலி ஆயுர்வேத வைத்தியசாலையில் 48 பேருக்கும், மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் 60 பேருக்கும், எறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் 30 பேருக்கும், அம்பாறை, வேரண்கரகொட மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் 30 பேருக்கும் நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையில் 30 பேருக்கும் அட்டாளைச்சேனை தள வைத்தியசாலையில் 30 பேருக்கும் சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொவிட் - 19 தொற்றாளர்களுக்கு ஆயுர்வேத வைத்தியசாலைகளில் சிகிச்சை அளிப்பதற்கான அனுமதியினை கொவிட்-19 தொடர்பான இராஜாங்க அமைச்சர் டாக்டர் சுதர்ஷினி பெர்னான்டோபுள்ளே நேற்று முன்தினம் வழங்கியிருந்தார்.

இதனையடுத்தே, கிழக்கு மாகாணத்திலுள்ள ஏழு ஆயுர்வேத வைத்தியசாலைகளை கொவிட் - 19 சிகிச்சை மையங்களாக மாற்றுகின்ற நடவடிக்கையினை மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அன்புச் சகோதரரின் அருமையான அரங்கேற்றம்



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

முகக்கவசம் களைந்து முறுவலுடன் சபை விளங்க அன்புச்சகோதரரின் மிருதங்க அரங்கேற்றம் மெல்பேண் மாநகரில் றோவில் பாடசாலை மண்டபத்தில் 17.04.2021 சனிக்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது. மேடை அலங்காரம் யாழ் மண்ணை நினைவில் கொண்டுவந்து நிறுத்தியது. மேடையின் முகப்பு கோவில்களின் மண்டபங்களில் காணப்படும் யாளியினைக் கொண்டதாய் வண்ணமாய் ஜொலித்தது. மேடையின் பின் அணியாகப் பெரியதாய் எம்பெருமான் சிவனின் உருவம் அழகான வண்ணத்தில் ஆசி வழுங்குவதாய் மிளிர்ந்தது. பின்பக்கமாக அரங்கின் இரு மருங்கும் வாழ வைக்கும் வாழைகள் வைக்கப்பட்டிருந்தன.வாழைகளின் நடுவில் பச்சையினைவெளிப்படுத்தும் பாங்கான செடிகள் பக்குவமாய் அழகினை மெருபடுத்தி நின்றன. மேடையின் முன்னே மங்கலமாய் மஞ்சள் நிற மலர்கள் வட்டமாய் கோலமிட கோலத்தின் நடுவே – தேவ சபையில் சிவனினாரின் திருநடனத்துக்கு லயத்தைக் கொடுத்து மிருதங்கம் முழங்கும் நந்தியெம்பெருமானின் வெண்கல வடிவம் வைக்கப்பட்டிருந்தமையினைப் பாராட்டியே ஆக வேண்டும். விநாயகப் பெருமானும், கல்வித் தெய்வமான கலைமகளும் மங்கல விளக்குகள் மத்தியில் மேடைக்குக் காவலாய், அரங்கேற்றத்துக்கு அரணாக வைக்கப்படிருந்தமை பக்தியின் பரவசத்தை நல்கியது எனலாம்.

இறை வணக்கத்துடன், குரு வணக்கத்துடன், பெற்றவர்கள் ஆசியுடன் அரங்கேற்றம் ஆரம்பமாகியது. அரங்கேற்றம் காணும் திருவளர் செல்வன் துவாரகன் திருவளர் செல்விஅபிதாரணியின் அன்புத் தந்தையார் கவிஞர், எழுத்தாளர், திரு சந்திரன் அவர்கள்

**உலகம் யாவையும் தாமுள வாக்கலும்**
**நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா**
**அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்**
**தலைவர் அன்னவர்க் கேசர ணாங்களே**

என்று கம்பநாடன் கவியினை முன் வைத்து வரவேற்புரையினை மிகவும் கச்சிதமாய் வழங்கினார். வரவேற்புரைக்கு அவர் தேர்ந்தெடுத்த கம்பநாடன் கவியினூடாக அவரின் இலக்கிய நோக்கும் அவர்வழி பயணப்படும் அவர் குடும்பத்தின் நோக்கும் தெள்ளிதிற் புலப்பட்டதென்றே கருதுகின்றேன்.

வரவேற்புரை நிறைவுற்றதும் திரை விலகியது. தேவ உலகத்தில் இருக்கிறோமா என்று எண்ணும் வகையில் மேடை ஒழுங்கமைப்பு எல்லோரையும் பிரமிக்க வைத்தது என்றுதான் சொல்ல வேண்டும். அணிசெய் கலைஞர்கள் அமர்ந்திருக்க வெண் மேகமாய் மேடை ஜொலித்திட மேடையின் இரு பக்கங்களிலும் இருந்து அண்ணாவும் தங்கையும் மேடையை நோக்கி வந்த விதம் அவையினரை அசர வைத்துவிட்டது என்றே சொல்லலாம்.எந்த ஒரு மிருதங்க அரங்கேற்றத்திலும் இடம் பெறா வகையில் இக்காட்சி கண்கொள்ளாக்காட்சியாய் அமைந்ததை மறந்துவிடவே முடியாது. அன்புச் சகோதர்களின் குருவான யோகன் கந்தசாமி அவர்கள் மேடையின் முன் வந்து ஆயத்தம் , ஆரம்பம் என்று மூன்று முறை கைதட்டி தலை நிமிர்ந்து தனது நாற்பத்து எட்டும் நாற்பத்து ஒன்பதாவதுமாகிய மிருதங்க அரங்கேற்றம் என்று சொல்லி பூரித்து நிற்க விக்கினங்கள் அகற்றும் விநாயகப் பெருமானின் துதியான வாதாபி கணபதிம் என்னும் கீர்த்தனையுடன் தொடங்கிய தொடக்கம் அனைவரையும் பிரமிக்க வைத்துவிட்டது என்றே சொல்லலாம். பாடிய அகிலன் சிவா நந்தன் அவர்கள், வயலின் மேதை முரளிக்குமார் அவர்கள், கடம் செல்வன் மருத்துவர் திவாகர் யோகபரன் அவர்கள், மோர்சிங் கலைஞர் கம்பன் புகழ்பாடும் ஜெயராம் ஜெகதீசன் அவர்கள் ஆரம்பக்கட்டத்தை தூக்கி நிறுத்தி நின்றார்கள் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

ஹம்சத்வனியுடன் அரங்கேற்றம் ஆரம்பமானதே களிப்பினை நல்குவதாய் அமைந்தது எனலாம். அகிலன் சிவானந்தன் எப்படிப் பாடினாலும் முரளிக்குமார் எப்படி வாசித்தாலும் அத்தனைக்கும் ஈடு கொடுக்கும் வண்ணம் துவாரகனும் அபிதாரணையும் தங்களின் விரலினால் வித்தை காட்டியது அவையினரின் அகத்தினில் புகுந்து விண்ணதிரும் வகையில் கரவொலியாய் எழுந்தது.

ஆதி தாளத்தில் ஹம்சத்வனியில் ஆரம்பித்த இசைக்கோலம் ரூபக தாளம், கண்ட ஜாதி துருவ தாளம், மிஸ்ர ஜம்பை தாளம் என வளர்ந்து தொடங்கிய ஆதி தாளத்துடன் மங்களமாய் மலர்ந்தது. கண்ட ஜாதி துருவ தாளத்தில் பல அட்சரங்களை அலாதியாய் அகிலன் சிவானந்தன் மெது வாயும் துரித கதியிலும் பாடி நிற்க – அகிலனின் வேகத்துக்கு ஏற்றாற்போல் தேர்ந்த வித்துவான்கள் வாசிப்பது போன்று துவாரகனும் அபிதாரணியும் அரங்கில் மிருதங்க வாத்தியத்தை அனுபவித்து வாசித்துக் காட்டி அனைவரையும் தம்வசமாக்கி விட்டனர் என்றுதான் சொல்ல வேண்டும்.இடைவேளை எப்படி வந்தது என்று தெரியாமலே அரங்கேற்றம் விறு விறுப்பாய் அமைந்திருந்தது.

இடைவேளையின் பின்னர் அரங்கேற்ற அரங்கு முற்றிலுமாக மாறியே காணப்பட்டது. பெரும்பாலான மிருதங்க அரங்கேற்றங்களில் வீணை வாத்தியம் இணைவது என்பது குறைவாக இருக்கிறது.ஆனால் இங்கு புதுமையாக இரண்டு வீணைகள் இணைந்து நின்றன. இணைந்தமை புதுமையன்று. வீணையை வாசித்த வித்துவான்கள் ராம்நாத் ஐயர் கோபிநாத் ஐயர் இருவரும் சகோதரர்கள். மிருதங்க அரங்கேற்றம் செய்யும் துவாரகனும் அபிதாரணியும் சகோதரர்கள். இதைத்தான் இசைக்கோலத்தின் புதுமை என்பதா? அல்லது இந்த மிருதங்க அரங்கேற்றத்தின் பெருஞ் சிறப்பு என்பதா? அல்லது சந்திரன் உஷா தம்பதியினரின் ஆளுமை என்பதா? எப்படிப் பார்த்தாலும் அன்புச் சகோதரர்களின் மிருதங்க அரங்கேற்றம் புத்தம் புதுமையாய் அமைந்தது எனலாம்.

வீணைச் சகோதரர்கள் தாங்களாகவே வடிவமைத்த கௌரி மனோஹரி இராகத்தில் மிஸ்ர ஜம்பை தாளத்தில் அமைந்த ராகம் தானம் பல்லவி – துவாரகன் அபிதாரணி சகோதரர்களுக்கு பெரும் சவாலாகவே அமைந்தாலும் அண்ணாவும் தங்கையும் கற்ற வித்தையினைக் கச்சிதமாய் காட்டி – பெற்றவர்களையும், பேணி நின்ற குருவினையும்,பார்த்துப் பருக வந்த ரசிகப் பெருமக்களையும் வியக்க வைத்திட்டார்கள் என்பதைக் கட்டாயம் சொல்லியே ஆகவேண்டும்.



வீணைகள் இணைய, வயலின் அருகணைய, மோர்சிங்கும் கடமும் துணையாக அகிலன் சிவானந்தனின் அருமையான தில்லானா களைகட்ட சந்திரனின் பாடல் உள்நுழைய, தமிழ்வாழ்த்து வந்து நிற்க, முத்தைத் தரு பத்தித் திருநகை அமைந்திட வேண்டும் என்னும் பக்தியின் நோக்கில் அருணகிரியார் அருட்திருப்புகழுடன் அன்புச் சகோதரர்களின் மிருதங்க அரங்கேற்றம் ஆனந்தமாய் நிறைவடைந்தது.

ஈன்ற பொழுதில் பெருதுவந்து நின்ற தாயார் உஷாவும், அவையவத்து முந்தியிருக்கச் செய்ய எண்ணிய தந்தை சந்திரனும் பூரித்து நின்றனர். அவர்களின் செல்வங்களான துவாரகனும் அபிதாரணியும் வள்ளுவன் வழியில் பெற்றவர்களை மற்றவர்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்டி நின்றனர். இவை அத்தனையும் மிருதங்க அரங்கேற்றத்தின் அடிநாதமாய் அமைந்திருந்தது என்பதை மனந்திறந்து சொல்லி மகிழ்கின்றேன்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அநுராதபுரத்தில் துப்பாக்கிச் சூடு

அநுராதபுரத்தில் இன்று (வியாழக்கிழமை) காலை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து உள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

வங்கி ஒன்றுக்கு முன்பாக இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.-

# கொரோனாவிலிருந்து குணமடைந்த மாணவன் ஒரு மாதத்தின் பின் சாவு

கொரோனாவிலிருந்து குணமடைந்த மாணவன் ஒரு மாதத்தின்பின் சாவடைந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் புத்தளம் விஞ்ஞான வித்தியாலயத்தில் உயர்தரம் கற்கும் ஆனந்த மூர்த்தி சஷிகுமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த மாணவர் புத்தளம் நகரத்தில் வாடகை வீடு ஒன்றில் வசித்து வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். மாணவியின் தாய் மதுரங்குளி பிரதேசத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றிய நிலையில் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளார். அதனைத் தொடர்ந்து மாணவனுக்கும் தொற்று உறுதியாகியுள்ளது. அவர் சிகிச்சை பெற்று குணமடைந்த ஒரு மாதத்தின் பின்னர் உயிரிழந்துள்ளார்.

மாணவன் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளர், மாணவனை அதிகாலையில் படிப்பதற்காக எழுப்பும் போது, அவர் எழும்பாமல் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டுள்ளார். இதன்போதே மாணவன் உயிரிழந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. இந்நிலையில் மாணவனின் உடலில் மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது.

# தனிமைப்படுத்தல் மீறிய மேலும் 238 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 238 பேர் இன்று (வியாழக்கிழமை) காலை 06 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண இதனைத் தெரிவித்தார்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

இதற்கமைவாக, கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையிலும் 5 ஆயிரத்து 486 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

# இந்திய நலனுக்காகப் பிரார்த்தித்தமைக்கு அந்நாட்டு தூதரகம் நன்றி தெரிவித்தது

முன் ஒருபோதும் எதிர் கொண்டிராத கொவிட் நோய்க்கு எதிராக தீவிரமான போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில் இந்திய சகோதரர்களின் நலனுக்காகத் தொடர்ந்தும் பிரார்த்தனைகளை முன்னெடுத்து வரும் இலங்கை மக்கள் மற்றும் மத குருமார்கள் உள்ளிட்டோருக்கு இந்திய மக்கள் சார்பாகவும் அரசாங்கம் சார்பாகவும் இந்திய உயர் தூதரகம் தனது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு இந்திய உயர் தூதரகம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் -

இந்திய மக்களின் ஆரோக்கியம் மற்றும் நலனுக்காக இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கிடைக்கப் பெறும் எண்ணற்ற தொலைபேசி அழைப்புகள், செய்திகள் தொடர்பாகவும் அதே நேரம் பல்வேறு இடங்களிலும் முன்னெடுக்கப்படும் விசேட நிகழ்வுகள் தொடர்பாகவும் இந்திய உயர் தூதரகத்தில் பணியாற்றும் அதிகாரிகளும் உயர் தூதரகரும் பெருமகிழ்வடைகின்றனர்.

இந்திய மக்களுக்காகப் பிரார்த்தனைகளும் பல்வேறு விசேட நிகழ்வுகளும் இலங்கையில் பல பிரதேசங்களிலும் நடத்தப்பட்டுள்ளன. பல்வேறு விகாரைகளில் ரத்ன சூத்ரா பாராயண நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

2021 ஏப்ரல் 29ஆம் திகதி வஸ்கடுவா ராஜகுரு ஸ்ரீ சுபுதி மகா விகாரையில் சங்கைக்குரிய கலாநிதி வஸ்கடுவா மஹிந்தவன்ஸ மகாநாயக்க தேரரின் ஆசியுடன் விசேட பூஜைகள் பிரார்த்தனைகள் நடைபெற்றன.

2021 மே முதலாம் திகதி எம்பிலிப்பிட்டியவில் உள்ள ஸ்ரீ போதிராஜ மடாலயத்தில் பாரத ஆசீர்வாத பூஜை ஒன்று சங்கைக்குரிய கலாநிதி ஓமல்பே சோபித நாயக தேரரால் புத்த தாதுக்கள் சந்நிதானத்தில் நடத்தப்பட்டிருந்தது.

அதேபோல மாளிகாகந்தையில் உள்ள ஆக்ராஸ்ராவக விகாரை உள்ளிட்ட பல இடங்களில் அன்றைய தினம் மகாபோதி சபையின் ஏற்பாட்டின் கீழ் சிறப்பு பிரார்த்தனைகள் இடம்பெற்றிருந்தன.

2021 மே இரண்டாம் திகதி கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா ஜஹம்பதின் ஏற்பாட்டில் திருகோணமலை திரியாய ரஜ மகா விகாரையில் மற்றொரு சிறப்பு வழிபாடு இடம்பெற்றிருந்தது.

2021 மே 3 ஆம் திகதி கங்காராமை விகாரையில் பாரத ஆசீர்வாத பூஜை நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அது மட்டுமல்லாமல் 2021 மே 5ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள ஸ்ரீ நாக விகாரையில் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றிருந்தன.

இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனம் மற்றும் புத்த சாசன, மத விவகாரங்கள், கலாசார விவகார அமைச்சு ஆகியவை இணைந்து 2021 மே 06 ஆம் திகதி முதல் ஒரு வார சிறப்பு பாராயண நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதேபோல 2021 ஏப்ரல் 30ஆம் திகதி யாழ்ப்பாணம் கந்தர்மடம் நடராஜர் ஆலயத்தில் இந்து மத சபையினால் விசேட பூஜைகள் நடத்தப்பட்டிருந்தன.

இந்த சிறப்பு வழிபாட்டின் ஓர் அங்கமாக வேத பாராயணங்கள் மற்றும் திருமுறை ஓதுதல் போன்ற நிகழ்வுகளும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன

2021 மே 2 ஆம் திகதி கொழும்பில் உள்ள சீரடி சாய் நிலையத்தில் மற்றொரு சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றிருந்தது.

இதன் தொடர்ச்சியாக 2021 மே 7ஆம் திகதி கொழும்பில் உள்ள மயூராபதி ஆலயத்தில் இந்திய மக்களின் ஆரோக்கியம் மற்றும் நலனுக்காக தன்வந்திரி பெருமானை வேண்டி மற்றொரு விசேட பூஜை நிகழ்வு ஒன்று நடைபெற உள்ளது.

இதற்கு மேலதிகமாக நாளை இலங்கையில் உள்ள பஞ்ச ஈஸ்வரங்களில் மஹா மிருத்யுஞ்ச யாகம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

2021 மே 2 ஆம் திகதி அங்கிலிக்கன் திருச்சபை ஞாயிறு திருப்பலியில் இந்தியாவின் நலனுக்கான பிரார்த்தனைகள் இடம்பெற்றிருந்தன.

வாழ்வின் பல்வேறு நிலைகளிலும் இந்தியாவில் கல்வியை பெற்றுக் கொண்டிருந்த இலங்கை பிரஜைகள் ஒன்றிணைந்து 2021 ஏப்ரல் 27ஆம் திகதி இந்தியாவுக்கான கூட்டு ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தனர்.

பல்வேறு வர்த்தக கட்டமைப்புகள் மற்றும் சங்கங்கள் போன்றவற்றினாலும் கூட்டு ஒருமைப்பாட்டுக்கான சமிக்ஞைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

2021 ஏப்ரல் 28ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய கடிதத்தில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் கவலையையும் வெளிப்படுத்தி இருந்தமை நினைவில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

2021 ஏப்ரல் 29ஆம் திகதி இந்திய உயர் தூதரர் கோபால் பாக்லேவுடனான சந்திப்பின் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது கூட்டு ஒருமைப்பாட்டையும் உணர்வு வெளிப்பாட்டையும் பிரதமர் மோடிக்கு தெரிவிக்கும் படி குறிப்பிட்டிருந்தார்.

இரு நாட்டு மக்கள் மத்தியிலும் மிகவும் ஆழமாக வேரூன்றி இருக்கும் உறவுகள் அத்துடன் இலங்கை மற்றும் இந்தியா இடையிலான பல்லாயிரம் ஆண்டு கால பிணைப்பு ஆகியவற்றின் உண் மையான பிரதிபலிப்பாக இடம்பெற்ற இந்த பிரார்த்தனைகள் மற்றும் வழிபாடுகள் போன்றவற்றால் இந்திய உயர் தூதரகம் பணிவன்புடன் மன நெகிழ்வடைகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

A/L2020 தொழினுட்பப் பிரிவில் சித்தி பெற்றுள்ள எமது கல்லூரி மாணவர்களை
பாராட்டி வாழ்த்துகின்றோம்
(பல்கலைக்கழக நுழைவுத் தகுதியைப் பெற்றுள்ள எமது மாணவர்களில் ஒரு தொகுதியினர்)

பொறியியல் தொழினுட்பவியல்

| இல. | மாணவர் பெயர் | பெறுபேறு | பாடத் திட்டம் | மாவட்ட நிலை | மாவட்டம் |
|---|---|---|---|---|---|
| 01. | வி.தமிழ்மாறன் | A2B | New | 01 | கிளி |
| 02. | அ.விஜயகணேஸ் | 2BS | New | 01 | முல்லை |
| 03. | மு.ப.மு.முஸ்ர்ரிப் | B2C | New | 01 | மன்னார் |
| 04. | ஆ.அபிலாஷன் | 2BC | Old | 01 | ஹற்றன் |
| 05. | ஜெ.பிரவண்ஜா | B2C | New | 02 | கிளி |
| 06. | கு.ஆனந்தி | ACS | New | 02 | முல்லை |
| 07. | ஜெ.துஸ்யந்தினி | 2AB | New | 04 | யாழ் |
| 08. | ரா.அரியன்பன் | B2C | New | 04 | கிளி |
| 09. | ர.பிரனித் | A2B | New | 05 | திருகோண |
| 10. | யோ.சுகந்தன் | 2AB | New | 06 | யாழ் |
| 11. | கு.வேணுகாந் | 2CS | Old | 09 | யாழ் |
| 12. | க.அர்ச்சிகா | A2B | New | 11 | யாழ் |
| 13. | பி.வரவன் | 2BC | New | 12 | யாழ் |
| 14. | த.மலரவன் | 3B | New | 13 | யாழ் |
| 15. | செ.டிலக்சன் | 2BC | New | 15 | யாழ் |
| 16. | கு.அனுரதன் | 2BC | New | 16 | யாழ் |
| 17. | கௌ.கரிதரன் | 3B | New | 17 | யாழ் |
| 18. | அ.கஜன்ராஜ் | A2C | New | 18 | யாழ் |
| 19. | சி.சயனி | ABC | New | 19 | யாழ் |
| 20. | ஜெ.டிலக்சன் | 2BC | New | 20 | யாழ் |
| 21. | க.நயுத்திரன் | 2BC | New | 21 | யாழ் |
| 22. | தே.கிருபானந் | 2BC | New | 23 | யாழ் |
| 23. | எஸ்.பிரதீபன் | A2C | New | 25 | யாழ் |
| 24. | ந.இசைப்பிரியன் | B2C | New | 26 | யாழ் |
| 25. | த.விந்துஜா | B2C | New | 30 | யாழ் |
| 26. | ச.கோபிகிருஸ்ணா | B2C | New | 32 | யாழ் |
| 27. | க.கமலரூபன் | B2C | New | 35 | யாழ் |

குறிப்பு :- நாட்டின் அசாதாரன சூழ்நிலை (Covid - 19) காரணமாக வகுப்புக்கள் அனைத்தும் தற்காலிகமாக நிகழ்நிலை (Zoom) இல் நடைபெறுகிறது.
அனைத்துப்பிரிவுகளுக்கும் புதிய அனுமதிகள் வழங்கப்படும்.
FB :- Wisdom Technical College

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்

| இல. | மாணவர் பெயர் | பெறுபேறு | பாடத் திட்டம் | மாவட்ட நிலை | மாவட்டம் |
|---|---|---|---|---|---|
| 01. | க.மதுஜா I.Rank - 06 | 3A | New | 01 | யாழ் |
| 02. | ச.துளசிகன் | 2BC | Old | 01 | யாழ் |
| 03. | ம.கயலினி | 2AB | New | 01 | கிளி |
| 04. | க.அனிஸ்ரலன் | 3A | New | 02 | யாழ் |
| 05. | க.மதுரா | 3B | New | 02 | கிளி |
| 06. | தோ.யூஜின் | A2B | New | 02 | முல்லை |
| 07. | சி.சரணியா | 2AB | New | 03 | யாழ் |
| 08. | ச.ஜிந்துஜா | B2C | New | 03 | கிளி |
| 09. | ம.சுதர்சினி | 3B | New | 05 | யாழ் |
| 10. | க.விஸ்ணுகா | ABC | New | 06 | யாழ் |
| 11. | ச.சஞ்சிகா | 3B | New | 10 | யாழ் |
| 12. | ச.ஜினோசன் | 2BC | New | 14 | யாழ் |
| 13. | கோ.கனிஸ்ரா | 3B | New | 15 | யாழ் |
| 14. | யே.ஆன்சுகனியா | B2C | New | 20 | யாழ் |
| 15. | கு.கிறிஸ்தீனா | B2C | New | 24 | யாழ் |
| 16. | சோ.யசிந்தன் | B2C | New | 25 | யாழ் |
| 17. | இ.வைஸ்ணவி | B2C | New | 26 | யாழ் |
| 18. | இ.மிதிலா | 3C | New | 30 | யாழ் |
| 19. | பி.கௌதமன் | ABS | New | 31 | யாழ் |
| 20. | ப.சிம்லா | 2BC | New | 32 | மாத்தறை |

தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு எனும் எமது இலக்கினை 6வது வருடமாகவும் அடைந்த பெருமையுடன் வெற்றிக்கு வித்திட்ட அதே ஆசிரியர் குழாத்தின் வழிகாட்டலில்
A/L 2021 மாணவர்களுக்கு துரித மீட்டல் வகுப்புக்கள்,
A/L 2022, 2023 மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
Day Batch ஆரம்பம் 08.05.2021
மேலதிக தகவல்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.
077 248 7774 / 076 552 9093 / 021 221 7860




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.05.2021இல் வெளியிடப்பெற்றது.